//தனி கவனம்//

தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் சென்னை. 600 006

ந க எண். 020479/எப்/இ2/2019 நாள். 17.07.2019

பொருள்: பள்ளிக் கல்வி – கல்வியியல் மேலாண்மை தகவல் முகமை Educational Management Information System (EMIS) – மாணவர்களின் விவரங்கள் Update செய்யாமை – மாணவர்களின் சேர்க்கை விவரம் EMIS உடன் வேறுபடுதல் – அறிவுரைகள் வழங்குவது தொடர்பாக.

பள்ளிக் கல்வித் துறை முதன்மைச் செயலாளர் அவர்களால் சில பள்ளிகள் ஆய்வு மேற்கொண்டதில் கல்வியியல் மேலாண்மை தகவல் முகமை (EMIS) இல் மாணவர்களின் விவரங்கள் Update செய்யாமல் இருப்பது கண்டறிப்பட்டுள்ளது. மேலும் மாணவர்களின் சேர்க்கை விவரமும் EMIS –இல் உள்ள மாணவர்களின் சேர்க்கை விவரமும் வேறுபட்டு உள்ளது தெரியவந்துள்ளது. இது அலுவலர்களின் கவனக்குறைவை சுட்டிக் காட்டுவதாக உள்ளது என தெரிவித்துள்ளார். மேலும் அவர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் தெரிவித்துள்ளார்.

எனவே அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களும் தங்கள் மாவட்டத்தில் உள்ள அனைத்து மாணவர்களின் விவரங்கள் கல்வித் தகவல் மேலாண்மை இணையதளத்தில் 24–07–2019 தேதிக்குள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளதை உறுதி செய்தல் வேண்டும்.

மேலும் மாணவர்களின் சேர்க்கை எண்ணிக்கையும் EMIS –இல் உள்ள மாணவர்களின் சேர்க்கை எண்ணிக்கை விவரமும் வேறுபாடு இருக்க கூடாது. வேறுபாடு இருக்கும் பட்சத்தில் அலுவலர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் முதன்மைக் கல்வி அலுவலர்கள் தங்கள் மாவட்டத்தில் உள்ள மாணவர்களின் சேர்க்கை எண்ணிக்கையும் EMIS –இல் உள்ள மாணவர்களின் சேர்க்கை விவரத்தினை வகுப்புவாரியான அறிக்கையினை

Scanned by CamScanner

இயக்குநரின் இமெயிலுக்கு 25.7.2019 அன்று மாலை 4 மணிக்குள் அனுப்ப வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது.

முதன்மைக் கல்வி அலுவலர்கள் தங்கள் கட்டுப்பாட்டில் உள்ள அனைத்து பள்ளிகளுக்கு அறிவிப்பு செய்து, மேற்காணும் பணிகள் அனைத்தும் கல்வித் தகவல் மேலாண்மை இணையதளத்தில் 24–07–2019ற்குள் முடிக்கப்பட வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறது. இப்பணி ஆய்வு செய்திட 25.07.2019 முதல் தங்கள் மாவட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட இணை இயக்குநர் வருகை புரிய உள்ளார்கள் என தெரிவிக்கப்படுகிறது.

பள்ளிக் கல்வி இயக்குநர்

பெறுநர்

அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்.

நகல்:அரசு முதன்மைச் செயலாளர், பள்ளிக் கல்வித் துறை, சென்னை 9 .
– தகவலுக்காக பணிவுடன் அனுப்பப்படுகிறது.

Scanned by CamScanner